DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 74/2019

Prosecution witness – PW.13

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.கருப்பன் | Caste: | |
| Father's Name | : தர்மக்கண்ணு | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

11.07.2025 – 12.35 PM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>சாட்சி கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. நான் வேலைக்கு செல்லும் போது முன் பணமாக ரூ.40,000/– வாங்கியதாகவும், வாரத்தில் 500 முதல் 700 வரை சம்பளம் தந்து கல் அறுக்கும் அளவிற்கு சம்பளம் வழங்கியதாகவும், ஒரு நாளைக்கு ரூ.2,000/– வேலை செய்தால் அதில் முன்பணமாக பெற்ற தொகையிலிருந்து ரூ.1,500/–யை கழித்துக் கொண்டு ரூ.500 மட்டும் கொடுத்ததாகவும், ஊருக்கு செல்ல வேண்டும் என்றால் அங்கிருந்து ஒருவர் மட்டுமே செல்ல வேண்டும் என்று இருந்ததால் எங்களுக்கு சிரமமாக இருந்ததாகவும், அங்கு வேலை பார்த்த கார்த்தி என்பவரை முதலாளி அடித்ததால் அவர் ஊசி போடுவதற்காக ஊருக்கு சென்று விட்டதாகவும், பின்னர் அவர் அதிகாரிகளிடம் கூறியதன் பேரில் அரசு அதிகாரிகள் அங்கு வந்து எங்களை ஒரு வாகனத்தில் ஏற்றி அபிராமம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து பின்னர் திருச்சுழிக்கு அழைத்துச் சென்று அதன் பிறகு எங்களை வீட்டிற்கு அனுப்பி வைத்ததாக போலீசார் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2. நான் சேம்பரில் வேலை செய்ததற்கு என்னிடம் ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். அங்கு எவ்வளவு செங்கல் அறுத்தோம்

என்பதற்கோ அதற்கு எவ்வளவு கூலி வழங்கப்பட்டதற்கோ, முன்பணத்தில் எவ்வளவு நிலுவைத் தொகை இருந்தது என்பது குறித்தோ, முன்பணத்தில் எவ்வளவு தொகை கழித்துக் கொண்டார்கள் என்பது குறித்தோ ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். முதலாளி மூர்த்தி எங்களுக்கு ஒரு நோட்டு போட்டு கொடுத்திருந்தார். ஆனால் சேம்பரிலிருந்து வெளியே வந்தபோது அதை எடுத்துவரவில்லை. ஆதார் கார்டை மட்டும் எடுத்து வந்தோம். மூர்த்தி நோட்டு போட்டு கொடுத்தது பற்றியோ அதை எடுத்து வரவில்லை என்பது குறித்தோ போலீசார் விசாரணையின் போது கூறியுள்ளேனா என்று எனக்கு நினைவு இல்லை.

3. எதிரிதான் சேம்பரின் உரிமையாளர் என்பதை அறிந்து கொள்ள அதற்கு ஆதரவாக என்னிடம் எதுவும் ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். அபிராமம் காவல் நிலையம் சென்று அன்றைய தினம் இரவே திருச்சுழி சென்று அங்கிருந்து வீட்டிற்கு சென்றுவிட்டோம். விடுவிக்கப்பட்டதற்கு மீட்பு சான்றிதழ் நான் பெற்றுள்ளேன். அந்த மீட்பு சான்றிதழை போலீசான் விசாரணையின் போது நான் காண்பிக்கவில்லை. எனக்கு ரூ.20,000/–பண உதவி கிடைத்தது. அந்த பண உதவி 6 மாதம் கழித்து கிடைத்தது. பண உதவி பெற்றதற்கு ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை. நான் பண உதவியை பெற்றுக் கொண்டேன் என்று எழுதிக் கொடுத்தேனா என்றால் எனக்கு நினைவில் இல்லை. போலீசார் அபிராமம் காவல்நிலையத்திலிருந்து திருச்சுழிக்கு அழைத்துச் சென்று அங்கு ஒரு மண்டபத்தில் வைத்து மீட்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ரூ.1000/–வீதம் கொடுத்தார்கள். இந்த விபரத்தை போலீசார் விசாரணையின் போது கூறவில்லை என்றால் எனக்கு நினைவில் இல்லை.

4. சுகன்யா சேம்பர் என்ற பெயரில் அபிராமத்தில் எந்த சேம்பரும்

இல்லை என்றால் சரியல்ல. அதற்கு மூர்த்தி உரிமையாளர் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் சுகன்யா சேம்பரில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விபரத்திற்காக போடப்பட்ட பொய்யான வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஓம்./–திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.